# இலக்கு

இதழ் 74

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஏப்ரல் 19, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1

## அன்னையின் உயிர்க்கொடை வேண்டி நிற்பதென்ன

அருண்மொழி

## தமிழ் கட்சிகளிடம் நிதானமும் செயற்திறனும் இருக்க வேண்டும்

முன்னாள் அமைச்சர், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்

## உலக ஒழுங்கை தலைகீழாக்கிய கொரோனா

பி.மாணிக்கவாசகம்

## காட்டப்படாத காட்சிகளும் கண்டு கொள்ளப்படாத வலிகளும்

சுடரவன்

## மாணவர்களின் தற்போதைய கல்வி நிலையும், வறுமையும்

க.குவேந்திரா 3ஆம் வருடம், கல்வி பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

## உலக தொல்லியல் தின நினைவுட்டல்

யதீஸ்குமார் தொல்லியல்துறை

# மிருசுவில் படுகொலை - நீதி கேட்டு கையொழுத்து போராட்டம்

மிருசுவிலில் சிறீலங்கா படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வேண்டி அனைத்துலக மன்னிப்புச்சபை கையெழுத்துப் போராட்டம் ஒன்றை இணையத் தளம் ஊடாக ஆரம்பித்துள்ளது.

சிறு குழந்தைகள் உட்பட 8 தமிழ் மக்களை சிறீலங்கா படையினர் படுகொலை செய்ததற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாயான சுனில் ரட் நாயக்கா வை சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சா கொரோனா வைரஸ் நெருக்கடியை காரணம் காட்டி விடுதலை செய்திருந்தார்.

இது அனைத்துலக விதிகளுக்கு முரணானது. எனவே தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு பின் வரும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது மன்னிப்புச்சபை.

சிறீலங்கா அரச தலைவர் தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். ரட்நாயக்காவுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

மிருசுவிலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு நீதி கிடைப்பதுடன், அவர்களுக்கு பாதுகப்பும் கிடைக்க வேண்டும்.

இந்த நடவடிக்கைக்கு பின்வரும் இணையத் தளத்தின் ஊடாக தமிழ் மக்கள் அனைவரும் தமது ஆதரவுகளை வழங்க வேண்டும் என இலக்கு இணையம் வாசகர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

*https://www.amnesty.org/en/get-involved/take-action/sri-lanka-demand-justice-for-mirusuvil-massacre-victims/?fbclid=IwAR0Y9E2ohhwsBbeqW__ihR7f4T9y8tgh__atAeYeVGO-Zx-zh5G3QZYkJ5Dw*

## அமெரிக்காவின் முடிவு சிறீலங்காவையும் பாதிக்கும்?

உலக சுகாதார நிறுவனத்திற்கான நிதியை நிறுத்தப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது பல நாடுகளில் அந்த நிறுவனம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பாதிக்கும் எனவும், ஆனால் அது தொடர்பில் தற்போது கருத்துக்கூற முடியாது எனவும் அதன் சிறீலங்காவுக்கான பிரதிநிதி கலாநிதி ராசியா பென்ஸி தெரிவித்துள்ளார்.

நோய்களை எதிர்க்கும் திட்டங்களுக்கு பல நாடுகளில் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் அமெரிக்காவின் நடவடிக்கை இந்த திட்டங்களை பாதிக்கும். ஆனால் சிறீலங்காவையும் பாதிக்குமா என்பதை தற்போது கூறமுடியாது. எனினும் நாம் சிறீலங்கா சுகாதாரத்துறைக்கு தொடர்ந்து தொழில்நுட்ப உதவிகளை வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுகாதாரத் துறையின் உத்தரவாதம் கேட்கிறது தேர்தல் திணைக்களம்

நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றால் சுகாதாரத் திணைக்களம் எழுத்து மூலம் உத்தரவை வழங்க வேண்டும் என சிறீலங்கா தேர்தல் திணைக்களம் நேற்று (18) தெரிவித்துள்ளது.

சிறீலங்கா அரசின் யாப்பு விதிகளின் அடிப்படையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் 3 மாதங்களுக்குள் தேர்தல் நடைபெற வேண்டும். எனவே கடந்த மார்ச் 2 ஆம் நாள் கலைக் கப்பட்ட நாடாளுமன்றத்திற்கான தேர்தலை ஜூன் மாதம் 2 ஆம் நாளுக்கு முன்னர் நடத்த வேண்டும். அவ்வாறு நடத்தப்படாது விட்டால் யாப்பு விதிகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அல்லது புதிய நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் தேர்தல் திணைக்களத்தின் மீது சிறீலங்கா அரசு அழுத்தங்களை பிரயோகித்து வருவதுடன், அவசரமாக ஊரடங்கு சட்டங்களை தளர்த்தி ஒரு இயல்பு நிலையை ஏற்படுத்த முயன்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கொரோனா வைரஸ் இறப்பு எண்ணிக்கை 160,434 ஆக அதிகரிப்பு

உலகை ஆக்கிரமித்துள்ள கோவிட்-19 என்ற கொரோனா வைரஸ் இன்தாக்கத்திற்கு பெருமளவான மக்கள் தொடர்ந்து பலியாகி வருகின்றனர்.

நேற்று(18) வரையிலும் 160,434 பேர் பலியாகியுள்ளனர், 2,324,713 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 595,467 பேர் குணமடைந்துள்ளனர்.

இறப்பு எண்ணிக்கையில் அமெரிக்காவே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்ததாக ஐரோப்பிய நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் இறந்தவர்கள் விபரம்:

அமெரிக்கா - 38,920, இத்தாலி - 23,227, ஸ்பெயின் - 20,639, பிரான்ஸ் - 19,323, பிரித்தானியா - 15,464, சீனா - 4,632, ஜேர்மனி - 4,352, கனடா - 1,310

## கடும் காற்று - புத்தளத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் சேதம்

புத்தளம் மாவட்டத்தில் கடந்த புதன் கிழமை(15) வீசிய கடும் காற்றினால் 1,083 வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நவகத்தேகம பகுதியில் 492 வீடுகளும், ஆன மடுவ பகுதியில் 377 வீடுகளும், கறுவெலகஸ் வெவ பகுதியில் 194 வீடுகளும், வண்ணாத்திவில்லு பகுதியில் 16 வீடுகளும் சேதமடைந்துள்ளதாக பேரனர்த்த முகாமைத்துவமையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். இந்த மையத்தின் நிறைவேற்று பணிப்பாளராக மேஜர் ஜெனரல் சுசந்தா ரணசிங்காவே நியமிக்கப்பட்டுள்ளார். சிறீலங்கா அரசு எல்லா துறைகளிலும் படையினரை நியமித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே வடமாகாணத்தில் இன்று (19) மாலை முதல் கடுமையான காலநிலை நிலவும் என காலநிலை அவதானிப்பு மையம் தெரிவித்துள்ளது.

## கொரோனாவினால் கடுமையாக பாதிக்கப்பட்ட மலையக மக்கள்

தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் தாம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமக்கு உடனடியாக வாழ்வாதார உதவிகள் தேவை எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கே நாம் அதிக நெருக்கடிகளை சந்தித்து வருகின்றோம். சமுர்த்தி நிவாரணம், உலர் உணவு உதவி எமக்கு தேவைப்படுவதுடன், எமது பிரச்சனைகளை அரசியல் மற்றும் சங்கப் பிரதிநிதிகள் பேச வேண்டும்.

சில பிராந்திய நிறுவனங்கள் ஊரடங்கு வேளையிலும் உரிய பாதுகாப்பு நடைமுறைகள் இன்றி எம்மை தொடர்ந்து பணி மேற்கொள்ள நிர்ப்பந்திக்கின்றன. நகர்புறங்களில் பணியாற்றிய எமது உறவுகள் வேலை இழந்ததால் நாம் மிகுந்த நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சில குடும்பங்களில் 10 பேர் உள்ள போதும் ஒருவர் தோட்டத்தில் பணியாற்றினாலும் சமுர்த்தி உதவிகள் அவர்களுக்கு வழங்கப்படாது என கிராம சேவகர் தெரிவித்துள்ளார், ஆனால் இது அங்கு வாழும் மக்களை கடுமையாக பாதித்துள்ளதுஎன மேற்கு பகுதி தேயிலை தோட்ட சமூகத்தின் தலைவர் முனியாண்டி பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

## வடக்கு, கிழக்கில் உள்ள பல மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தளர்வு

வடக்கு - கிழக்கில் உள்ள பல மாவட்டங்கள் உட்பட பெருமளவான மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ளதாக சிறீலங்கா அரசு நேற்று (18) தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி, கேகாலை மற்றும் அம்பாறை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் தினமும் காலை 5 மணி முதல் மாலை 8 மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ளது.

சிறீலங்கா அரசின் கடுமையான நடவடிக்கை மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஊரடங்குச் சட்டத்தின் தளர்வு ஒரு ஆறுதலை அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

## உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாது திணறும் மக்கள்

சிறீலங்கா அரசு திடீரென அறிவித்த ஊரடங்கு சட்டத்தினால் தமிழ் விவசாயிகள் அதிக பாதிப்புக்களை சந்தித்துவருகின்றனர்.

வவுனியாவில் தமது அறுவடைகளை நிறைவு செய்த விவசாயிகள் தமது பொருட்களை விற்பனை செய்வதில் கடும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

கடைகள், சந்தைகள் மூடப்பட்டு போக்கு வரத்து வசதிகள் நிறுத்தப்பட்டுள்ளதால் தமது உற்பத்திப் பொருட்களை வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்ய முடியாது விவசாயிகள் கடும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர். பல ஆயிரம் கிலோ பெரிய பூசணி, கறிமிளகாய், கத்தரிக்காய், பயிற்றங்காய், பாகற்காய், பப்பாசி, பச்சை மிளகாய், பசன் பழம், வத்தகைப் பழம் ஆகியவற்றை சந்தைப்படுத்த முடியாது உள்ளதாகவும், தமக்கு உதவுமாறும் விவசாயிகள் உதவி கோரியுள்ளனர்.

## கோவிட்-19 காரணமாக இறந்த உறவுகளுக்கு வன்னியில் அஞ்சலி

கொரோனா வைரசின் தாக்கத்தால் புலம் பெயர் தேசங்களில் உள்ள பல தமிழ் மக்கள் உயிரிழந்து வருகின்றனர். இது உலகத் தமிழ் மக்களை ஆழ்ந்த துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளை மீட்பதற்காக வவுனியாவில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுவரும் பாதிக்கப்பட்ட மக்கள் கொரோனா வைரசின் தாக்கத்தால் புலம்பெயர் தேசங்களில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கு தமது அஞ்சலிகளைத் தெரிவித்துள்ளனர்.

தமது போராட்ட பந்தலில் கடந்த வியாழக்கிழமை (16) அன்று 1154 ஆவது நாளில் மெழுகு வர்த்திகள் ஏற்றி வணக்கம் செலுத்தியுள்ளனர்.

# அன்னையின் உயிர்க்கொடை வேண்டி நிற்பதென்ன

அன்னை பூபதி ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலை வடிவம். தென் தமிழீழத்தில் இருந்து வெளிப்பட்ட மக்கள் போராட்டத்தின் அதியுத்தம வரலாறு. இந்திய அரசிடம் நீதி கேட்டு அகிம்சை வழியில் பட்டினிப் போராயுதம் ஏந்திய போராளி. அவர் ஈழத்தமிழ் மக்களின் பெரும் அரசியல் விடுதலை ஆயுதமாக வெளிப்பட்டார்.

மகாத்மா காந்தி சாத்வீகப் போரால் வென்றெடுத்ததாக வரலாறு கூறும் இந்திய தேசம் அமைதிப் படைகளாக தனது படைகளை இலங்கைக்கு அனுப்பியது. தமக்கு அரசியல் சுதந்திரம் பெற்றுத்தரும் என்று நம்பி மக்கள் ஆரவாரித்து அவர்களை வரவேற்றனர். திணிக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தம் தனது முக்கிய சரத்துக்களை ஒருபோதும் நடைமுறைப்படுத்தாது என்பதைப் புரிந்து கொள்ளாமல் மக்கள் மகிழ்ந்து களித்தனர்.

தமிழரின் அரசியல் விடுதலைப் போராட்ட ஆயுதங்களை கையளிக்க வைப்பதில் இந்தியா காட்டிய கவனத்தை தமிழரின் இறைமை சார் காப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் காட்ட மறுத்தது.

இந்தியாவின் இந்த ஏமாற்று அரசியலை வெளிப்படுத்த தியாகி திலீபன் நீரையும் உணவையும் மறுத்து அகிம்சைப் போர் தொடுத்தார். அதன் வழியில் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் திலீபன் மக்கள் முன்பாகவே தியாக மரணமடைந்தார்.

அதன் பின் விடுதலைப்புலிகளின் தளபதி, போராளிகள் 13பேர் யுத்த நிறுத்த விதிகளை மீறி இலங்கைப் படைகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நஞ்சருந்தி வீரச்சாவடைந்தனர்.

இந்த நிலையில், இந்தியப் படைகள் விடுதலைப்புலிகளின் மீது தாக்குதலை ஆரம்பித்தனர். சண்டைகளில் ஏற்பட்ட தோல்விகளின் போதெல்லாம் அப்பாவி தமிழ் மக்களை பழிதீர்த்தது பாரத படுகொலைப் படை. சித்திரவதைகள், கொலைகள், பாலியல் வன்புணர்வுகள் என உலகின் மிகக் கொடுமையான படையாக இந்தியப் படை தன்னை இனங்காட்டி நின்றது.

இந்தக் கொடுமையான நிலைமைகளைக் கண்ட அன்னையர் முன்னணியினர் உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் இறங்கினர்.

அன்னை பூபதி உண்ணா நோன்பில் தன்னை ஈடுபடுத்தினார். எத்தனை வேண்டுகோள்கள், அச்சுறுத்தல்கள், குடும்பத்தையே கொலை செய்வோம் என்ற மிரட்டல்கள் வந்த போதும் அந்த அன்னை சிறிதும் கலங்காமல் துணிந்து நின்றாள். அமைதி வழியில் நின்று போராடிய அந்த தாய் சாவை நோக்கி சென்று கொண்டிருந்தாள்.

இந்திய அரசு இதனை கண்டு கொள்ளவுமில்லை பொருட்படுத்தவுமில்லை. இந்திய வல்லாதிக்கம் அமைதி போராட்டங்களை ஒரு பொருட்டாக மதிக்காது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமானது. அன்னை தியாகத் தீயில் உருகி அணைத்தாள்.

அன்று இந்திய வல்லாதிக்கத்தை அதன் எடுபிடிகளை எதிர்த்து நின்ற எமது அன்னையர்களின் தற்றுணிவு, தற்கொடை உணர்வு என்பன ஈழ விடுதலைப் போராட்டத்தில் மக்கள் எழுச்சியின் ஒரு உயரிய வடிவம். அந்த அன்னையரை அவர்களுக்கு துணை நின்ற மக்களை அவர்களின் செயற்பாடுகளை இன்று மீட்டுப் பார்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அடக்குமுறைகளுக்கு எதிராக அநீதிகளுக்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டிய எம்மினம், சிதறி சின்னாபின்னமாகிக் கிடக்கிறது. சுய நல அரசியல், துரோகத்தனங்கள் நானே பெரிதென்ற ஆணவம், பரஸ்பர புரிந்துணர்வின்மை, காழ்ப்புணர்வு என்பவற்றால் கட்டுண்டு கிடக்கிறது எம்மினம்.

புரியப்பட்ட தியாகங்களையும், கொடுக்கப்பட்ட உயிர் விலையையும் மறந்து விட்டு மற்றொரு உலகில் நாம் வாழ்கின்றோம். கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் ஒரு பொதுவான புள்ளியில் ஒற்றுமையுணர்வுடன் செயற்படக் கூடிய அளவுக்குக்கூட எம்மவர்களின் உணர்வுகள் இன்னும் உருப்பெறுவதாக இல்லை.

அன்னை பூபதி உள்ளிட்ட இந்த தேசத்துக்காக உயிர்தந்த உத்தமர்களுக்கு நாம் செய்யக்கூடிய மெய்யான கைம்மாறு ஒன்றுபட்ட ஓரினமாய் உயர்ந்து நிற்பதே.

**அருண்மொழி**

# இலக்கு

## "கோவிட்-19" காலத்தேவை "ஈழத்தமிழர் உரிமைகள் வலை"

'கோவிட்-19' தொற்று மனித வாழ்வியலின் எல்லா நிலைகளிலும் பலத்த மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தன்னைத் தனிமைப்படுத்தித் தன்னையும் மற்றைய மனிதர்களையும் காக்கும் பொறுப்பு என்பது, தனி மனித நிலையிலும் சமூக மனித நிலையிலும் மனித உரிமைகளையும் மக்கள் உரிமைகளையும், தனி மனிதன் நிலைநாட்ட வேண்டியதாகவும், அதற்கு அந்த மக்களை ஆட்சி செய்யும் அரசாங்கம் உரிய பாதுகாப்பையும், அடி ப்படை மனிதத் தேவைகளையும் பாதிப்படையாது பேண வேண்டியதாகவும் உள்ளது.

இதனைத் தனி மனிதன் தன் மனித உரிமைகளையும் மற்றவர்களின் மனித உரிமையையும் சமமாக மதித்து தன்னளவில் மனித உரிமைகளுக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் முக்கியத்துவம் அளித்து பொது மனித வாழ்வில் சுரண்டலும் ஒடுக்கலும் இடம்பெறாத வகையில் தன்னை ஒழுங்கு படுத்திக் கொள்தல் வேண்டும். இதனை அரசாங்கம், சட்ட உருவாக்கம், சட்ட நிர்வாகம், சட்ட அமுலாக்கல் மூலமாக எந்தவித வேறுபாடுகளும் காட்டாது உறுதி செய்தல் அவசியமாகிறது. அதே வேளை தனி மனித நிலையிலும் சமூக மனித நிலையிலும் உணவு, இல்லிடம், மருத்துவம் என்பன தடையின்றி இயன்ற அளவு அனைவருக்கும் கிடைப்பதற்கான மூலவளங்களையும் நிதிவளத்தையும் மனித வளத்தையும் அரசாங்கம் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருத்தலும் இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

ஆனால் இலங்கையில் ஈழத்தமிழர்களையும் தனது குடிகளாக உலகுக்கு வெளிப்படுத்தி வரும் சிறீலங்கா அரசாங்கம், இந்த 'கோவிட்-19' வாழ்வு தொடங்கிய நாள் முதலில் இருந்து இன்று வரை சிங்கள பௌத்த இன மக்களுக்கு அளிக்கும் சேவைகள் பாதுகாப்புகளுக்கு முதன்மையளித்தல் என்னும் பௌத்த சிங்கள மகாவம்ச மனோநிலையில் இருந்து பெரிதளவில் விடுபடவில்லை என்பதற்குப் பல்வேறு சான்றுகள் வெளிவருவதை அனைவரும் அறிவர். இந்த நிலையில், யாழ்ப்பாண சமூக மத்துவ ஆலோசக மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் அவர்களது கடமைப் பொறுப்பு வாய்ந்த தகவல் பரிமாற்றத்தைக் கூட 'இனஅழிப்புச் சமுதாயச் சிந்தனை' நோக்கில் சிறீலங்காவின் அரச மருத்துவர்கள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் கரித அலுத்கே 'ஏற்று க்கொள்ள முடியாத சர்ச்சைக்குரிய' ஒன்றென விமர்சித்து மேல் விசாரணையை கோரியுள்ளமை, படித்த சிங்கள இனத்தவர் கூட இந்த 'இனஅழிப்புச் சமுதாய சிந்தனை'ப் போக்குக்கு விதிவிலக்கானவர்களல்ல என்பதனை மேலும் நிரூபித்துள்ளது.

இவ்வாறான இனஅழிப்புச் சமுதாய சிந்தனை உள்ள பெரும்பால ான சிங்கள மக்களையும், இந்த இனஅழிப்புச் சிந்தனையையே தமது அரசியல் கொள்கையாக்கிச் சிங்கள பௌத்த அரசாகவே சிறீலங்கா அரசாங்கத்தை வெளிப்படுத்துவதில் பெருமைபெறும் அரசாங்கமும் உள்ள இலங்கைத் தீவில் சிங்களப்படைத் தலைமைகளின் மேலாண்மையையே 'கோவிட்-19' தொற்றைக் கட்டுப்படுத்துவதில் மட்டுமல்ல அதன் பின்னரான இன்று வரை யான வாழ்வியலிலும் கூட காணக்கூடியதாக உள்ளது.

இந்நிலையில் 'கோவிட்-19' ஆல் இறந்தவர்களின் உடலங்களை எந்த விசாரணையுமின்றி எரிக்கலாம் என்னும் அரசவர்த்தமானிப் பிரகடனம் இதே போன்று படைகளுக்கு உடலங்களை விசாரணையின்றி எரிப்பதற்கான அதி காரத்தை 1979களில், அன்றைய சிறீலங்கா அரச அதிபர் ஜே. ஆர் ஜெயவர்த் தனா வழங்கிய பின்னர் தமிழின அழிப்புக்கு அது பயன்பட்ட வரலாற்றை, ஈழத்தமிழர்கள் மீள்நினைந்து, இனங்காணக் கூடிய அச்சவாழ்வுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த இனங்காணக்கூடிய அச்சத்தை ஈழத்தமிழர் தாயகப் பகுதிகளில் வாழும் முஸ்லீம் மக்களும் அடைந்துள்ளனர்.

இவ்வாறான சூழலில் ஈழத்தமிழர்களதும், ஈழத்தமிழர் தாயகப் பகுதிக ளில் வாழும் முஸ்லீம் மக்களதும் மனித உரிமைகள் விடயங்களை, இந்த 'கோவிட்-19' காலத்தில் உலகின் மனித உரிமை அமைப்புக்களும், மனித உரிமை ஆர்வலர்களும், உடனுக்குடனும் தொடர்ந்தும் அறியவும், அவதனிக்கவும், உரியன செய்யவும் கூடிய, முழுமையான 'ஈழத்தமிழர் உரிமைகள் வலை' ஒன்று இன்றைய 'கோவிட்-19' காலத்தின் உடன் தேவையாகிறது. புலம்பெயர் தமிழர்கள், தாயகத்து ஈழத்தமிழர்கள், உடனுழைப்பு மூலம் இது உடன் நடைமுற ப்படுத்தப்பட்டாலே 'கோவிட்-19' கால வாழ்வில் ஈழத்தமிழர் உரிமைகளை உலகால் ஓரளவுக்காவது பாதுகாக்க இயலும்.

**– ஆசிரியர்**

# உலக ஒழுங்கை தலைகீழாக்கிய கொரோனா

பி.மாணிக்கவாசகம்

சீனாவின் வூஹான் மாநகரில் வெளிப்பட்டு உலக நாடுகளை நிலைகுலையச் செய்துள்ள கொரோனா வைரஸ் உலக ஒழுங்கையே மாற்றி அமைத்துள்ளது. ஆயுத பலமும், பொருளாதார பலமும் இருந்தால் போதும், உலக வல்லரசாகத் திகழ முடியும் என்ற சர்வதேச பலவானுக்குரிய தத்துவத்தை சாதாரண கண்ணுக்குப் புலப்படாத இந்த வைரஸ் தவிடு பொடியாக்கி உள்ளது.

கண்டம் விட்டு கண்டம் பாய்கின்ற ஏவுகணைகளும் நீர்மூழ்கிக் கப்பல்களில் பொருத்தப்பட்ட பாரிய ஏவுகணை செலுத்தி பீரங்கிகளும் இருந்தால் உலக நாடுகளை ஆட்டிப்படைக்க முடியும். அச்சுறுத்திப் பணிய வைக்க முடியும் என்ற உலக வல்லரசு என்ற மேலாண்மைத் தன்மை இந்த வைரஸின் முன்னால் கூனிக் குறுகி நிற்கின்றது.

ஆளில்லாத விமானங்கள், விண்வெளிக் கலன்கள் என உயர் விஞ்ஞான தொழில் நுட்பத்தின் ஊடாக வளர்ச்சிப் போக்கில் வியக்கத்தக்க சாதனைகளைப் புரிந்துள்ள வல்லரசு நாடுகளினால் இந்த வைரஸின் தாக்கத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை. கையாளாத ஒரு நிலையில் அந்த வல்லாண்மை மடங்கி ஒடுங்கி தடுமாறி நிற்கி ன்றது.

விஞ்ஞானத் தொழில் நுட்பத் திறனும், பொரு ளாதார மேன்மையும், ஆயுத பலமும் இருந்தால் மட்டும் போதாது, இவற்றை அளவீடாகக் கொண்டு உலகளாவிய நிலையில் மேலாண்மை நிலையை-வல்லரசுத் தன்மையை நிறுவமுடியாது என்ற கசப்பான பாடத்தைக் கொரோனா வைரஸ் உலக வல்லரசு நாடுகளுக்கு முகத்தில் அறைந்தாற்போல உணர்த்தி உள்ளது.

அளவற்ற செல்வம் இருக்கலாம், உலகளாவிய ரீதியில் அதிகாரத்தைச் செலுத்தக் கூடிய புஜ வலிமை இருக்கலாம். ஆனால் உடல் ஆரோக்கியமுள்ள மக்களைக் கொண்டிருப்பதே உண்மை யான மேலாண்மை நிலையாகும் என்பதை கொரோனா உலக நாடுகளுக்கு இடித்து உரைத்திருக்கின்றது.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி யுத்த மோதல்களில் வல்லாண்மையுடன் திகழ முடியும் என்ற நிலைமை படிப்பாக மாற்றம் பெற்று நவீன முறையில் நேரடி மோதல்களின்றி யுத்தத்தைக் கொண்டு நடத்துவதற்கான வழிவகைகள் குறித்து வல்லரசு நாடுகள் பல்வேறு ஆராய்ச்சிகளை நடத்தி இருக்கின்றன.

அந்த ஆராய்ச்சியின் மூலம் உயிரியல் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டு சிறிய அளவில் எழுபது களுக்கு முன்னர் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆயினும் 1975 ஆம் ஆண்டு உயிரியல் ஆயுதத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட சர்வதேச உயிரியல் ஆயுத சாசனம் அதனைத் தடை செய்துள்ளது. இந்த சாசனத்தில் 182 நாடுகள் கையெழுத்திட்டிருக் கின்றன. பத்து நாடுகள் அதனை ஏற்கவுமில்லை. கையெழுத்திடவுமில்லை.

ஆனால் கொரோனா வைரஸ் அத்தகைய உயிரியல் ஆயுதங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தி எதிரிகளை அழித்தொழிக்க முடியும் என்பதை உலகுக்கு உணர்த்தியுள்ளது. இத்தகைய ஒரு நிலைமை உருவாகலாம் என படைத்துறை வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

ஏனெனில் கொரோனா வைரஸ் தன்னளவில் ஓர் உயிராயுதமாகச் செயற்பட்டிருப்பதை உலக மக்கள் இன்று கண்ணாரக் காண்கின்றார்கள். ஆயுத வலிமையும் பொருளாதார பலத்தையும் கொண்டிருந்த நாடுகள் இந்த உயிர்கொல்லி வைரசுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தளர்ந்து சோர்ந்து தவிக்கின்றன.

நோய் எதிர்ப்பு சக்தி என்ற வல்லமை இருந்தாலொழிய இந்த கொரோனா வைரசுக்கு எதிராகப் போராட முடியாது என்பது ஐயந்திரிபற நிரூபிக்கப்பட்டுள்ளது. நோய் எதிர்ப்பு சக்தியும், நோய்த் தடுப்புக்கான கவசங்களும் இல்லையேல் இத்தகைய ஆபத்தான நிலைமையை எதிர்கொள்ள முடியாது என்ற பாடத்தைக் கொரோனா வைரஸ் உலக மக்களுக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளது.

உலக வல்லரசுகளின் ஆயுத பலத்தினாலும், விஞ்ஞான தொழில்நுட்ப வலிமையினாலும், பொருளாதார பலத்தினாலும் தடுக்க முடியாத கொரோனா வைரஸை சாதாரண முகக் கவசம் நெருங்க விடாமல் தடுத்து, தனது வலிமையை நிரூபித்திருக்கின்றது.

கொரோனா வைரஸ் நோய்த்தாக்கத்திற்கு அவசியமான சிகிச்சை அளிப்பதற்குரிய சரியான மருந்துகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்த நோய் வராமல் தடுப்பதற்குரிய தடுப்பு மருந்துகளும் கண்டறியப்படவில்லை. இந்த நிலையில் வெறும் முகக் கவசத்தையும், பிபிஈ (PPE – Personal Protective Equipment) எனப்படுகின்ற தனி மனித தற்காப்பு சாதனங்கள் பொருட்களையும் பயன்படுத்தித்தான் கொரோனா வைரஸின் நோய்த் தொற்றில் இருந்து மருத்துவ நிபுணர்களும், மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள், சுகாதாரத்துறை பணியாளர்களும் தங்களைத் தற்காத்து வருகின்றார்கள்.

இந்தத் தற்காப்பையும் மீறி, அந்தக் கவசங்களையும் உடைத்துக் கொண்டு உட்புகுந்ததனால் மருத்துவ நிபுணர்களும் மருத்துவர்களும் நூற்றுக் கணக்கில் கொரோனா வைரசுக்குப் பலியாகி உள்ளனர். அதேபோன்று தாதியர்கள் மற்றும் சுகாதாரத் துறை பணியாளர்களும் பெரும் எண்ணிக்கையில் இந்த நோய்க்கு இரையாகி உள்ளனர்.

விண்வெளிப் பயணங்களை மேற்கொள்ளலாம். அண்டவெளியில் உள்ள கோள்களில் சென்று குடியேறலாம். அங்கு குடியேறி வாழ்வதற்கு வேண்டிய தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை பூவுலகத்தில் இருந்து அங்கு கொண்டு செல்வதற்குரிய வழி வகைகள் குறித்து விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் வழிவகைகளை மனிதன் கண்டறியலாம்.

ஆனால் கண்ணுக்குத் தெரியாத வகையில் தும்மல் இருமலின் மூலமாகவும் நெருங்கிய சுவாசத்தின் ஊடாகவும் தொற்றிப் படர்கின்ற வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பயன்பட மாட்டாது என்பதும் நிரூபணமாகி உள்ளது.

கைகுலுக்குவதன் மூலமும், கட்டியணைப்பதன் ஊடாகவும், ஒருவர் பயன்படுத்திய பொருட்களின் ஊடாகவும் ஒரு மனிதனில் இருந்து மற்றொருவருக்கு எவ்வாறு தொற்றிக் கொள்ளலாம். எப்படி பற்றிக் கொள்ளலாம் என தனக்கான தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற இந்தக் கொடிய வைரஸின் பிரசன்னத்தைக் கண்டு பிடிக்க முடியாத அவல நிலைக்கு மனிதனின் விஞ்ஞான தொழில்நுட்பத் திறன்கள் ஆளாகியிருக்கின்றன. அதற்கான வலிமையும் ஆற்றலும் அற்றவையாக அந்தத் திறன்கள் திகழ்கின்றன.

இந்த நிலைமையானது மனித குலத்திற்கு ஏற்பட்டுள்ள மாபெரும் பின்னடைவாகும். அமெரிக்காவைப் பற்றிப் பீடித்துள்ள கொரோனா வைரஸினால் அந்த நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார பலத்தோடு, உலக வல்லரசாகத் திகழ்ந்த அமெரிக்காவின் பொருளாதாரம் கொரோனாவின் கோரப் பிடியினால் 74 வருடங்கள் பின்னோக்கித் தள்ளப் பட்டுள்ளதாக ஆய்வாளர்களும் பொருளாதார நிபுணர்களும் சுட்டிக்காட்டி உள்ளனர்.

பொருளாதாரப் பாதிப்புக்கு முன்னதாக கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினால் அதிக எண்ணிக்கையான பொது மக்களின் உயிர்களைப் பறிகொடுத்த நாடாகவும் அமெரிக்கா மாறியுள்ளது. உலக நாடுகளைத் தனது பொருளாதாரப் பலத்தினாலும் ஆயுத வலிமையினாலும் ஆட்டிப்படைத்து உலக பொலிஸ்காரனாகத் திகழ்ந்த அமெரிக்கா, கொரோனா வைரஸ் நோயை எதிர்த்துப் போராடுவதற்கு அவசியமான மருத்துவ உபகரணங்களையும் இன்று சீனா, இந்தியா போன்ற நாடுகளிடம் கையேந்தி, கூனிக் குறுகி நிற்கின்ற நிலைமைக்கு ஆளாகியுள்ளது. இது மிகவும் வருத்தத்திற்குரியது.

அது மட்டுமல்லாமல் தனக்குத் தேவையான முகக் கவசங்கள் மற்றும் தற்காப்பு உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டில் தனது நேச நாடுகளையே பகைத்துக் கொள்கின்ற நிலைமைக்கு ஜனாதிபதி ட்ரம்பை அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸின் தாக்கம் நிர்ப்பந்தித்துள்ளது.

சீனாவிடம் இருந்து பிரான்ஸ் நாட்டுக்கென அனுப்பி வைக்கப்பட்ட நோய்ப் பாதுகாப்பு உபகரணங்களைக் கூடிய விலை கொடுத்து ஜனாதிபதி ட்ரம்ப் தனதாக்கிக் கொண்டார் என்றும், கனடாவுக்கு அனுப்புவதாக ஒப்புக்கொண்ட முகக் கவசத் தொகுதியொன்றை அங்கு அனுப்ப முடியாது என முரண்டு பிடித்து, முறுகல் நிலை ஏற்பட்டதன் பின்னர் அதனை வழங்கியதாகவும், செய்திகள் வெளியாகி இருந்தன. அத்துடன் கொரோனா வைரஸ் நோய்க்கு உரிய குளோரோகுயின் மருந்தை இந்தியா அமெரிக்காவுக்கு அனுப்புவதில் ஏற்பட்ட தாமதத்தையடுத்து, ஜனாதிபதி ட்ரம்ப் இந்திய அரசு அந்த மருந்தை அனுப்பாவிட்டால், அதன் விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

கொரோனா வைரஸ் நோய்த்தாக்கத்தில்

**தொடர்ச்சி 05 பக்கம்**

# மாணவர்களின் தற்போதைய கல்வி நிலையும், வறுமையும்

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையானது *Covid-19* வைரசின் தாக்கத்தின் உச்சமாகும். சமூக ஒன்றுகூடல்களின் மூலமாக அதிகரிக்கின்ற இந்த வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்கில் நமது அரசாங்கத்தினால் கடந்த *13.03.2020*அன்று பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, இன்று வரை நீடிக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகள் வைரஸ் தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் நல்லெண்ணத்திலேயே அமுல்படுத்தப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலையானது அரசியல், பொருளாதாரதுறைகளிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இதனடிப்படையில் கல்வித்துறையானது எதிர் காலத்தில் பாரிய சவாலை எதிர்நோக்க நேரிடும். இவ்வாறான கல்வித்துறைசார் பின்னடைவுகளை தவிர்க்க இலங்கை அரசானது இணையவழி கல்விச் செயற்பாடுகளை பாடசாலை மாணவர்களுக்கும், பல்கலைக் கழக மாணவர்களுக்கும் நடைமுறைப்படுத்த முன்னெடுக்கும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கதாகும். அதனடிப்படையில் மாணவர்களுக்கு வானொலி, தொலைக்காட்சி, சமூகவலைத்தளங்கள் மூலமாக பல கல்விசார் செயற்பாடுகள் நடைபெற்ற வண்ணமே உள்ளன.

இவ்வாறான நிலையில் இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இந்த இணையவழி *(online)* கல்விச் சேவைகள் வினைத்திறனாக மாணவர்களிடம் சென்றடைகின்றதா என்பது கேள்விக்குறியே. பாடசாலை நடைபெறுகின்ற காலங்களிலும் கூட வறுமையின் கோரப்பிடியிலுள்ள மாணவர்களினால் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். இதில் தற்போதைய நிலை மிக கடினமானதாகும்.

இந்த வகையில் ஆப்ரகாம் மாஸ்லோவின் கொள்கையினை நாம் மனதில் கொள்ள வேண்டும். ஒருவனுக்கு முதலும் அடிப்படையுமாக அமைவது

தனது உடலியல் தேவைகளாகும். அந்த வகையில் ஒருவனுடைய வயிறு நிறைந்தால்தான் அவன் அடுத்த கட்டத்திற்கு தனது செயற்பாடுகளை முன்னெடுக்க முனைகிறான்.

எனினும் ஒருவேளை உணவிற்கே கஷ்டப்படுமளவிற்கு இந்த வைரஸ் தாக்கம் அநேகமானோரை வறுமையில் வாட வைத்துள்ளது. இதில் அவ்வாறான குடும்ப பின்னணியிலுள்ள மாணவர்களினால் எவ்வாறு தனது இணையவழி கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென்பது கவலைக்குரிய விடயமே.

இதிலும் முக்கியமானது கிராமப்புறங்களிலுள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாரியளவில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. தற்போதைய நிலையில் வலையமைப்பு வேகம் *(Network Speed)* வெகுவாக குறைந்துள்ளது. இதனால் அநேகமான கிராமப்புறங்களில் வலையமைப்புக்களுக்கான உந்துதல் *(Coverage)* கிடைப்பதேயில்லை. மேலும் மீள்நிரப்பு *(Recharge)* செய்வதற்கான சூழ் நிலைகளும் காணப்படவில்லை. இவ்வாறான நிலையில் இணையவழி கல்வி வறுமையிலுள்ள மாணவர்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது.

அன்றாடம் தினக்கூலியினை பெறுகின்ற மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர் குடும்பத்தினுடைய தற்போதைய நிலையானது ஒரு நேர உணவிற்கே போராட வேண்டியுள்ளது.

அநேகமான தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சமூக பற்றாளர்கள் போன்றோர் அவ்வப்போது உதவிகளை மேற்கொண்டாலும் இந்த ஊரடங்கு நிலை பிரகடனப்படுத்தப்பட்ட நாட்களுக்கு, இவ்வாறான உதவிகள் முழுமையாக ஈடு கொடுக்க முடியாது. மேலும் அரசாங்கமானது சமுர்த்தி பயனாளிகளுக்கு *5000* ரூபாய் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. எனினும் இந்த சலுகையினை பெற்றுக் கொள்வதில் மக்கள் பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதையும், அநேகமான குடும்பங்களுக்கு அவ்வாறான சலுகைகள் கிடைக்கப் பெறுவதே இல்லையென ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் என்பது *'நீருக்குள்ளால் நெருப்பை கடத்துவது'* போலாகும்.

எனவே தற்போதைய அசாதாரண சூழ் நிலையானது பொருளாதாரத்தி லும் பாரிய சரிவை ஏற்படுத்தும் என பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆகையால் அதற் கேற்றால் போல் கல்விச் செயற்பாடுகளையும் அமைக்க வேண்டும். எதிர்வரும் *11.05.2020* அன்று பாடசாலைகள் மீள ஆரம்பமாகும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் கிட்டத்தட்ட *2* மாத கால விடுமுறைக்கு ஆளாக நேரிட்டுள்ளது. எனவே இதனை கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து, முன்னெடுத்தல் அவசியமாகும். மேலும் அரசியல்வாதிகள் தாம் பிரதிநிதித்தவப்படுத்தும் பிரதேசங் களின் கல்விச் செயற்பாடுகளை பூரண கரிசனை கொண்டு, செயலாற்றி சரிவடைந்த கல்விச் செயற்பாடுகளை உயர்த்தி நிலை நாட்ட வேண்டும்.

**கு.குவேந்திரா**
**3ஆம் வருடம்,**
**கல்வி பிள்ளை நலத்துறை,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

## உலக ஒழுங்கை ... தொடர்ச்சி...

இருந்து அமெரிக்காவைப் பாதுகாப்பது மட்டுமல்ல. மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு ஆளாகியுள்ள நாட்டை பொருளாதார ரீதியாக நிமிர்த்த வேண்டிய பாரிய கடப்பாட்டிற்குள்ளேயும் ஜனாதிபதி ட்ரம்ப் சிக்கியுள்ளார். கொரோனா வைரஸ் தாக்கத்தையடுத்து, ஏற்பட்டுள்ள முடக்க நிலை காரணமாக *16.8* மில்லியன் பேர் வேலை இழந்திருப்பதாகவும், இந்த நோய் நெருக்கடி தொடருமானால் மேலும் மோசமடையலாம் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

உலக பொலிஸ்காரன் என்ற பெயரோடு முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த அமெரிக்காவில் *6* இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களைப் பற்றிப் பிடித்து, *26* ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் உயிர்களைக் குடித்து, இன்னும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸின் கோரப் பிடியில் இருந்து மீள்வதற்கு ஜனாதிபதி ட்ரம்பும் அந்த நாட்டு மக்களும் கடினமாகப் போராட வேண்டி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்கா மட்டுமல்லாமல் இத்தாலி, பிரான்ஸ், பிரித்தானியா, ஸ்பெயின் உள்ளிட்ட பல் வேறு நாடுகளும் எவ்வாறு கொரோனா வைரஸின் தாக்கத்தில் இருந்து மீளப் போகின்றன என்பது தெரியவில்லை.

• • •

# தமிழ் கட்சிகளிடம் நிதானமும் செயற்திறனும் இருக்க வேண்டும்

முன்னாள் அமைச்சர், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்

**மேலோட்டமாக பார்த்து தமிழர் ஐக்கியப் படவில்லை என்று கூற முடியாது. ஐக்கியம் என்ற ஒரே காரணத்துக்காக எல்லோரையும் ஒன் றாக சேர்த்து விடவும் முடியாது. அரசியலில் நிதானம் இருக்க வேண்டும், தூரப் பார்வை இருக்க வேண்டும், நேர்மை இருக்க வேண்டும். செயற்திறன் இருக்க வேண்டும். அரசாங்கத்தில் இருந்து கொண்டோ, எதிர்க் கட்சியில். இருந்து கொண்டோ வெறும் வெட்டிப் பேச்சுக்களை மட்டும் பேசிக் கொண்டு நேரத்தைக் கடத்திக் கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டு வாக் குகளை வாங்கிக்கொண்டு பாராளுமன்றம் சென்று வெறுமனே தூங்கிக் கொண்டிருக்க முடியாது என முன்னாள் அமைச்சரும், ஜனநா யக மக்கள் முன்னனியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

**அவர் எமக்கு வழங்கிய பிரத்தியோக நேர்காணலினை இங்கு தருகின்றோம்:**

**கேள்வி:**

**தற்போதைய கொரோனா சூழ்நிலையில் வடக்கு, கிழக்கு, மலையக பிரதேசங்களில் உள்ள பாமர மக்கள் எவ்வாறான கஸ்டங்களை எதிர் நோக்குகின்றனர்?**

**பதில்:**

வடக்கு கிழக்கு மலையகம் என்பதைவிட அதிகமாக மேல் மாகாணத்தில் கொழும்பு, கம் பகா, களுத்துறை மாவட்டங்கள் மற்றும் புத்தளம் மாவட்டத்திலும் தான் கொரோனாவால் சுகாதாரப் பிரச்சினையும், ஊரடங்கு காரணமாக வாழ்வாதா ரப் பிரச்சினையும் அதிகமாக உள்ளது. வடக்கு கிழ க்கு, மலையத்தில் இதன் தாக்கம் இல்லையென்ப தல்ல. கண்டி மாவட்டத்தில் ஒரு கொரோனா நோயாளி இனங்காணப்பட்டுள்ளார். அதே போல யாழ்ப்பாணத்திலும் போதகர் ஒருவர் வந்து சென்ற தன் பின்னர் தாவடிப் பிரதேசம் அடைத்து வைக் கப்பட்டு தற்போது திறந்து விடப்பட்டுள்ளது. இது ஆங்காங்கே நடந்த சம்பவங்கள் மட்டும் தான். நான் மேற்கூறிய மாவ ட்டங்கள் தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:**

**கடந்த கால அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த அமைச்சராக நீங்கள் செயற்பட்டிருந்தீர் கள். அந்த காலகட்டப் பகுதியில் தமிழர் தாய கப் பிரதேசங்களில் இடம் பெற்ற சிங்களமய மாக்கல், பௌத்த விகாரைகள் அமைக்கப் பட்ட நிகழ்வுகள் தொடர்பாக உங்களது கவன த்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இந்த விட யம் தொடர்பாக உங்கள் ஆட்சிக் காலத்தில் எவ்வாறான செயற்பாடுகளை மேற் கொண் டிருந்தீர்கள்?**

**பதில்:**

முதலில் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண ப்பட வேண்டும் என்றால் பிரச்சினை பேசப் பட வேண்டும். பேசுபொருள் ஆக்கப்பட வேண்டும். அதுதான் பிரச்சினைத் தீர்விற்கு முதற்கட்ட அடிப் படை. சிந்திப்பவர்களுக்கு அறிவுள்ளவர்களுக்கு அது விளங்கும். நான் அமைச்சுப் பொறுப்பை ஏற்ப தற்கு முன்னாலே இருந்து வடக்கு கிழக்கிலே சிங் கள மயமாக்கல், பௌத்த மயமாக்கல் எல்லாம் நடந்து கொண்டு தான் இருந்தது.

ஆனால் நான் அமைச்சுப் பொறுப்பை ஏற்ற பிற்பாடு பல விடயங்களை பேசுபொருளாக்கி னேன். உதாரணமாக திருகோணமலையிலே கன் னியா வெந்நீரூற்று பிரதேசத்திலே உள்ள பிள்ளை யார் கோவில் பிரச்சினையில் நான் தலையிட்டிருந் தேன். அது சம்பந்தமாக அமைச்சரவையில் பேசி யிருந்தேன் ஜனாதி பதியுடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தேன். பலமுறை இதற்குப் பொறுப் பான திணைக்களத்துடன் நான் பொருதி இருக்கி ன்றேன். அதைப் போல முல்லைத்தீவு நீராவியடிப் பிரச்சனையில் கூட இரண்டு முறை அங்கு சென்றி ருக்கி ன்றேன்.

உரியவர்களோடு பேச்சுவார்த்தை நடாத்தி இருக்கின்றேன். அதற்கு முன்னால் எந்தவொரு அரசாங்க அமைச்சர்களும் அந்தளவிற்கு நேரடியா கச் சென்று தலையிட்டு விடயங்களை செய்ததி ல்லை. அதற்கு தீர்வு வழங்கப்படா விட்டாலும் கூட அதனைப் பேசுபொருளாக்கி சிங்கள பௌத்த மயமாக்கல் அந்த இடத்தில் நிறுத்தப் பட்டது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏதோ காரணமாக இதற்கு பெரிய அளவில் ஒத்து ழைக்கவில்லை. திருகோணமலை கன்னியா வெந் நீரூற்று பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதி யுடன் பேச்சுவார்த்தைக்கு ஒழுங்கு செய்துவிட்டு அழைத்த பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் யாரும் அதில் கலந்து கொள்ளவில்லை. எல்லாத் தரப்பும் இணைந்து கரகோசம் செய்தால் தான் சத்தம் வரும். என்னால் இயன்றதை நான் செய்திருக்கின்றேன் அவ்வளவு தான்.

**கேள்வி:**

**இலங்கையில் தமிழ் மக்களின் கூட்டு பல வகைகளில் சிதைந்திருக்கின்றது. சில முக்கிய மான விடயங்களிலாவது தமிழ் மக்கள் கூட்டி ணைவதற்குரிய சந்தர்ப்பம் இருக்கிறதா? அல் லது அதற்கு என்ன வகையான செயற்பாடுகளை செய்ய வேண்டும் என நினைக்கின்றீர்கள்?**

**பதில்:**

கூட்டு சிதைந்து விட்டது என்று சொல்ல முடியாது. வடக்கு கிழக்கில் மூன்று பிரதான கட்சி கள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கூட்டிணைவை நடாத்திக் கொண்டு தான் இருக்கி ன்றார்கள். வடக்கு கிழக்கிற்கு வெளியே பிரதான மூன்று கட்சிகள் தமிழர் முற்போக்கு கூட்டணி என்ற கூட்டணியை நடத்திக் கொண்டு தான் இருக் கிறார்கள். அதில் நான் தலைவராக இருக்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவ ராக சம்பந்தன் அவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே ஒட்டு மொத்தமாக வடக்கு கிழக்கில் ஒரு கூட் டணி இருக்கின்றது. வடகிழக்கிற்கு வெளியே ஒரு கூட்டணி இருக்கின்றது. வடக்கில் கூட்டமைப் பிற்கு வெளியே இன்னும் சில கட்சிகள் இருக்கி ன்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இருக்கி ன்றது. தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி இருக்கி ன்றது. ஈ.பி.டி.பி இருக்கின்றது.தமிழ் மக்கள் கூட்ட ணியில் கூட மூன்று அல்லது நான்கு கட்சிகள் கூட்டிணைந்திருக்கின்றது.

தென்னிலங்கையிலேஎங்கள்கூட்டணியை விட இன்னொரு கட்சி இருக்கின்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இருக்கின்றது. ஆகவே மேலோட்டமாக பார்த்து தமிழர் ஐக்கியப்படவி ல்லை என்று கூற முடியாது. ஐக்கியம் என்ற ஒரே காரணத்துக்காக எல்லோரையும் ஒன்றாக சேர்த்து விடவும் முடியாது. அரசியலில் நிதானம் இருக்க வேண்டும், தூரப் பார்வை இருக்க வேண்டும், நேர்மை இருக்க வேண்டும். செயற்திறன் இருக்க வேண்டும். அரசாங்கத்தில் இருந்து கொண்டோ, எதிர்க் கட்சியில். இருந்து கொண்டோ வெறும் வெட்டிப் பேச்சுக்களை மட்டும் பேசிக் கொண்டு நேரத்தைக் கடத்திக் கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டு வாக்குகளை வாங்கிக்கொண்டு பாராளு மன்றம் சென்று வெறுமனே தூங்கிக் கொண்டிருக்க முடியாது.

**கேள்வி:**

**மலையக தோட்டத் தொழிலாளர்களது ஊதியம் தொடர்பான தொடர்ச்சியான இழுபறி நிலை காணப்படுகின்றது. இதற்கான தீர்வை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

பதில்:

15 இலட்சம் மலையகத் தமிழர்களிலே ஒன்றரை இலட்சம் பேர் தோட்டத் தொழிலாளர்க ளாக உள்ளார்கள். அவர்களுக்கு ஏறக்குறைய 760 ரூபாய் நாளாந்த வேதனமாகக் கிடைக்கின்றது. 1000 ரூபாவாக வேதனம் உயர்த்தப்படுமென்று வாக்கு றுதி கொடுத்தவர்கள் இப்போது கொரோனாவைக் காரணம் காட்டி தர மறுக்கின்றார்கள். கொரோனா வுக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. கொரோ னா தாக்கத்தால் இந்த வேதன அதிகரிப்பின் தேவை அதிகமாக இருக்கின்றது.

**கேள்வி:**

**உங்களது எதிர்கால அரசியல் பயணம் எப்படி இருக்கப் போகின்றது?**

**பதில்:**

என்னைப் பொறுத்தவரையில் நான் நம்பிக் கையை எப்போதும் இழப்பதில்லை. என்னுடைய பிரதான சக்தி, தகைமை என நான் கணிப்பது என் னிடம் எரிந்து கொண்டிருக்கும் நம்பிக்கை ஒளி யைத் தான். எந்தச் சூறாவளியாலும் இதனை அழி த்து விட முடியாது. ஆகவே நல்லது நடக்கும் என்று நம்புகின்றேன். பலம் பலவீனத்தை அடிப்ப டையாக வைத்து நாம் முன்னகர வேண்டும். எங்க ளது அரசியல் கட்சி தவிர்க்கப்பட முடியாத தேசிய அரசியல் சக்தியாக விளங்குகின்றதை யாரும் மறு த்து விட முடியாது.

• • •

# உலக தொல்லியல் தின நினைவூட்டல்

**யதீஸ்குமார்** தொல்லியல்துறை

பாரம்பரிய மரபுகளை கொண்டிலங்கும் இந்தியர்களாகிய நாம் இன்றைய சந்ததியினருக்கும் நமது வருங்கால சந்ததியர்க்கும் அவற்றை எடுத்துச் செல்வது நமது தலையாய கடமையாகும்.

உலக ஐக்கிய நாடுகளின் கீழ் இயங்கும் கல்வி, அறிவியல், பண்பாடு அமைப்புக் குழுவானது, 1972ஆம் ஆண்டு உலக பாரம்பரிய சின்னங்களையும், இயற்கை மரபுகளையும் பாதுகாக்க தீர்மானம் நிறைவேற்றியது. இதனுடைய தலையாய குறிக்கோள் ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளில் உள்ள மரபுச் சின்னங்களைத் தெரிவு செய்து அவற்றை உலக மரபுச் சின்னங்களாக அறிவித்து, பாதுகாத்து பன்னாட்டு மக்களும் எதிர்கால சந்ததியினரும் பயனுற வழிவகை செய்வதாகும். இதன் மூலம் உலக அளவில் பாரம்பரியச் சின்னங் களை தெரிந்து கொள்வதற்கும் பன்னாட்டு பரிமாற்றத்திற்கும் வழிவகை செய்துள்ளார்கள்.

உலக அளவில் இதுவரை 1121 சின்னங்கள், மரபுச் சின்னங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 869 பண்பாட்டு சின்னங்களாகவும் 213 இயற்கை வளம் சார்ந்ததாகவும் இவை இரண்டும் கலந்ததாக 39 சின்னங்களும் அடங்கும். ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளான 167 நாடு களிலிருந்தும் 1977 ஆம் ஆண்டு முதல் இம் மரபுச்

சின்னங்கள் தெரிவு செய்யப்பட்டு வருகி ன்றன.

பன்னாட்டு மரபுச் சின்ன ஐக்கிய நாடுகள் அமைப்பும், பன்னாட்டு இயற்கை மரபு மற்றும் புனரமைப்பு அமைப்பும், பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு அமைப்பும் இணைந்து செயற்பட்டு உலக மரபுச் சின்னங்களை பாதுகாத்து வருவதுடன் பராமரிப்பு மேற்கொள்ளும் பெரும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தியாவில் 38 பாரம்பரிய சின்னங்கள் உள்ளன . அவற்றில் 30 பண்பாட்டுச் சின்னங்கள் ஆகும். 7 இயற்கை வளம் சார்ந்த சின்னங்களாகவும், ஒன்று இரண்டும் சார்ந்த சின்னங்களாகவும் உள் ளன.

தமிழகத்தில் உலக மரபுச் சின்னங்களாக 2 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவை மாமல்லபுரத்தில் உள்ள பல்லவர் காலத்திய குடைவரை மற்றும் கட்டிட கோயில்கள் 1984ஆம் ஆண்டும், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில், கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில், தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயில்(சோழர் கால ஒருங்கிணைந்த மரபுச்சின்னங்கள்) 1987ஆம் ஆண்டும் தெரிவு செய்யப்பட்டன. இவை தமிழகத்தின் பாரம்பரிய கலை, சிற்பக்கலை, தொழில் நுட்பம் மற்றும் மிகச் சிறந்த படைப்பாற்றலை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளன. நீலகிரி மலை தொடர் வண்டிப் போக்குவரத்து பாரம்பரியக் களமாகவும் (Mountain Railways of India 1999), மேற்குத் தொடர்ச்சி மலை 2012ஆம் ஆண்டு முதல் இயற்கை வளம் சார்ந்த பகுதியாக உலக பாரம்பரிய சின்னத்தில் உள்ளன.

உலக பரம்பரிய வாரமானது நவம்பர் மாதம் 19ம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 18ஆம் திகதி உலக பாரம்பரிய மற்றும் இயற்கை சின்னங்கள் நாள், உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும்

## கொரோனா - மூன்று மண்டலங்களாக பிரிக்கப்படும் இந்தியா

இந்தியாவில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் மே 3ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் நாளை(20) முதல் மக்களின் நலன் கருதியும், பொருளாதார மேம்பாட்டை கருத்திற் கொண்டும் சில தளர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன் கொரோனா தொற்றை அடிப்படையாக வைத்து நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களும் மூன்று மண்டலங்களாக பிரிக்கப்படவுள்ளது.

முதலாவது சிவப்பு மண்டலம் – இங்கு 80 வீதம் கொரோனா நோயாளர்கள் இருப்பார்கள். இந்த பிரிவில் நாட்டில் 170 மாவட்டங்கள் உள்ளன. இவற்றில் டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, பெங்களூரு மற்றும் ஐதராபாத் ஆகிய பெரு நகரங்களும் அடங்கும். தமிழகத்தில் 22 மாவட்டங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது மண்டலம் செம்மஞ்சள் நிறமுடையது. இது மிதமான பாதிப்பு உடைய பகுதியாகும். இதில் 207 மாவட்டங்கள் உள்ளடங்குகின்றன. இந்தப் பகுதியில் 80 வீதத்திற்கும் குறைவான கொரோனா தொற்றுள்ளவர்கள் உள்ளடங்குவர்.

மூன்றாவது மண்டலம் பச்சை நிறமுடையது. இது பசுமை மண்டலமாகும். இது கொரோனாவால் பாதிக்கப்படாதவர்கள் உள்ள பகுதியாகும்.

தற்போது அதிக பாதிப்புக்கு உள்ளான மாவட்டங்கள் என்று வகைப்படுத்தப்பட்ட மாவட்டங்களில் 14நாட்கள் எந்த புதிய கொரோனா தொற்று நோயாளர்களும் இனங்காணப்படாவிட்டால் அது செம்மஞ்சள் நிற மண்டலமாகவும், அடுத்த 14 நாட்களில் புதிதாக தொற்று ஏற்படாவிட்டால் அது பச்சை மண்டலமாகவும் மாற்றப்படும். தற்போது அதிக பாதிப்புக்குள்ளான சிவப்பு மண்டலத்தில் 28 நாட்கள் எந்த பாதிப்பும் இல்லை என்றால் அது பச்சை மண்டலத்துக்கு மாற்றப்பட்டு விடும். இதே போல தொற்றுள்ளவர்கள் அதிகரித்தால் பசுமை மண்டலமும் சிவப்பு மண்டலமாக மாறக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

ஏப்ரல் 20க்குப் பின்னர் சில குறிப்பிட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம், இலத்திரனியல் தொடர்பானவை, வாகன உதிரிப்பாக திருத்தகங்கள் உட்பட மக்களுக்கு அத்தியாவசியம் தேவைப்படும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் விவசாய செயற்பாடுகள், விவசாயம் சார்ந்த தொழிற்பாடுகளும் ஆரம்பிக்கப்படும். ஆனால் ஒரு குறிப்பிட்ட அலுவலகமோ, தொழிற்சாலையோ இயங்க வேண்டுமானால் அது பாதுகாக்கப்பட்ட அதிதீவிர மையமாக இல்லாமல் இருக்க வேண்டும். அந்தப் பகுதியை சுற்றி கொரோனா உறுதி செய்யப்பட்டவர்கள் இருக்கக் கூடாது என்று விதிமுறைகள் கூறுகின்றன.

மேலும் சில செயற்பாடுகளுக்கு தொடர்ந்து தடை இருக்கும். சமய வழிபாடுகள், கல்வி நிலையங்கள், பாடசாலைகள், திரையரங்குகள், வணிக வளாகங்கள், சமூக, அரசியல், பிற நிகழ்ச்சிகள் ஆகியவை மீதான தடைகள் தொடர்ந்து நீடிக்கும். பொது மக்கள் நிகழ்வுகள், அரசியல் கூட்டங்கள், ஒன்றுகூடல்கள், பொது மக்களின் ஒன்றுகூடல்கள் போன்றவை மீதான தடை தொடர்ந்தும் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைகளை பொது மக்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வருவார்களேயானால், மிக விரைவில் தொற்று முழுமையாக வெற்றி கொள்ளப்படும் என அரசு அறிவித்துள்ளது. நாடும் மிக விரைவில் பழைய நிலைக்கு மீண்டு விடும் என்பதும் அரசின் நம்பிக்கை. இதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாக உள்ளது.

# மானுடத்தின் எசமான்கள்

**பாகம் 02**

தமிழில் ந. மாலதி

பேராசிரியர் நோம் சொம்ஸ்கி மேலே குறிப்பிட்ட தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். இதில் இன்றைய உலக அரசியல் பற்றி ஒரு அறிமுகம் தருகிறார். இன்றைய மானுடத்தின் எசமான்கள் யார், இந்த எசமான்களுக்கு இன்று சவாலாக இருப்பவர்கள் யார் என்பதை பற்றி இதில் பேசுகிறார். இக்கட்டுரையின் முதல் பகுதியை 'மேற்குலக அதிகாரத்திற்குள்ள அழுத்தங்கள்' என்ற தலைப்பில் கடந்த வாரம் தந்திருந்தோம். அதன் இரண்டாவது பகுதி இது வாகும்.

**இன்றைய கிழக்கு-ஆசிய சவால்கள்**

*"அமெரிக்காவின் ஏரி"* போல என்று விபரிக்கப்பட்ட பசுபிக் கடலை எடுத்துக் கொள்வோம். அண்மைய ஒரு அறிக்கையில், 'ஐ-அமெரிக்காவின் *B-52* குண்டு விமானம் கிழக்கு சீன கடற்பரப்பில் அதனது ஒரு வழமையான பணியின் போது தவறுதலாக சீனா கட்டியுள்ள செயற்கை தீவின் அண்மையாக பறந்தது. இது வாஷிங்டனும் சீனாவும் கடுமையாக மோதும் ஒரு விடயம் என்று பாதுகாப்பு உயரதிகாரிகள் சொன்னார்கள்." என்று கூறப்பட்டுள்ளது.

*70* ஆண்டுகளுக்கு முந்திய வல்லரசுகளின் பயங்கரமான அணுவாயுத பந்தயத்தின் வரலாற்றை தெரிந்தவர்களுக்கு, இம்மாதிரியான சம்பவங்கள் பலமுறை அணுவாயுதப் போரை தூண்டும் அபாயமான நிலைக்கு முன்னர் வந்தது நினைவிருக்கும்.

*70* ஆண்டுகளுக்கு முன்னர் உலகம் அணுவாயுத போருக்கு அண்மையாக வந்தது போல மேலே கூறிய *2018* சம்பவத்தை தொடர்ந்து சீனா தனது அணுவாயுத விமானங்களை அமெரிக்காவுக்கு அண்மையாக கொண்டுவரவில்லை. தமது வணிகத்திற்கான கடல் பாதையெங்கும், ஜப்பானிலிருந்து மலாக்கா நீரிணை ஊடாகவும், அப்பாலும் பகைமை சக்திகள் நிறைந்திருக்கின்றன என்பது சீனாவின் தலைவர்களுக்கு நன்றாகவே தெரியும். இவையெல்லாம் பெருமளவில் ஐ-அமெரிக்க இராணுவத்தால் பாதுகாக்கப்படுகின்றன என்பதும் அவர்களுக்கு தெரியும்.

இதனால், சீனா அதிக வளங்களை போட்டு மேற்குப்புறமாக தனது வணிக பாதைகளை வளர்த்து அவற்றை கவனத்துடன் இணைத்து வருகிறது. சங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் *(Shanghai Co-operation Organization (SCO)* வரைபுக்கு அமைவாகவே இவைற்றை சீனா செய்து வருகிறது. இவ் வமைப்பில் மத்திய-ஆசிய நாடுகள் மற்றும் ரஷ்யா உள்ளன. விரைவில் இந்தியா, பகிஸ்தானும் இதில் இணையும். ஈரான் இதன் ஒரு பார்வையாளராக இருக்கும். பார்வையாளராகவும் ஐ-அமெரிக்காவுக்கு இதில் இடம் கொடுக்கப்படவில்லை.




அதோடு இப்பிராந்தியத்தில் உள்ள ஐ-அமெரிக்க இராணுவ தளங்களை மூடுமாறு அந்த அமைப்பு வேண்டுகோளும் விடுத்துள்ளது. *("US Military Bases Around the World"* என்று இணையத்தில் தேடினால் பிரமிப்பாக இருக்கும்).

இப்பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை அதிகரிப்பதற்காக பழையகாலத்து "பட்டுப்பாதை" போன்ற ஒரு புதிய பாதையை சீனா கட்டி வருகிறது. அதுமட்டுமல்ல, இப்பாதை வழியாக ஐரோப்பாவையும் எண்ணெய் வளம் கொண்ட மத்திய-கிழக்கு நாடுகளையும் அடையலாம். ஒன்றிணைக்கப்பட்ட ஆசியவுக்கான சக்தி *(energy)* மற்றும் உற்பத்தி ஒழுங்கை உருவாக்குவதற்காக சீனா பெருமளவான வளங்களை கொட்டுகிறது. அதிவேக ரயில் பாதைகளை உருவாக்கிறது, எண்ணெய் குழாய்களையும் போடுகிறது.

இத்திட்டங்களின் ஒரு பகுதியாக உலகி லேயே உயரமான மலைகளூடாக சீனா அமைத்தி ரு க்கும் பெருவீதி பகிஸ்தானிலுள்ள சீனாவின் கவுடார் துறைமுகத்துக்கு போகிறது. சீனாவின் கடல் வணிகத்தில் ஐ-அமெரிக்கா தலை யிட முடியாத பாதையாக இது உள்ளது. இத் திட்டங்கள் பாகிஸ்தானில் வளர்ச்சியை தூண்டும் என்றும் சீனாவும் பாகிஸ்தானும் எதிர் பார்க்கின்றன. பெருமளவான இராணுவ நிதியுதவிகளை பாகிஸ்தானுக்கு வழங்கிய ஐ-அமெரிக்கா, இம்மாதிரி வளர்ச்சி திட்டங்ளை அங்கு முன்னெடுக்கவில்லை. சீனாவுக்கு அதன் மேற்கு ஷின்சியாங் மாநிலத்தில் பயங்கரவாத பிரச்சினை உள்ளதால், பாகிஸ்தானில் நிலவும் உள்நாட்டு பயங்கரவாதங்களை பாகிஸ்தான் அடக்குவதற்கு இத்திட்டங்கள் உதவலாம் என்றும் சீனா எதிர் பார்க்கிறது.

வணிக நோக்கத்தோடு இந்திய கடலில் சீனா அமைத்து வரும் "முத்து மாலை" தளங்களின் ஒரு பகுதியாக இந்த கவுடர் துறைமுகம் இருக்கும். இது இராணுவ தேவைகளுக்கு பாவிக்கப்படலாம். தற்காலத்தில் சீனா தனது செல்வாக்கை பாரசீக வளைகுடா வரையும் பரப்புவதற்கு இது ஏதுவாக இருக்கும்.

ஐ-அமெரிக்காவின் இராணுவ பலத்தால் பாதிக்க முடியாத திட்டங்களாக இத்திட்டங்கள் யாவும் உள்ளன. ஒரேயொரு வழியில் மட்டுமே, அதாவது அணுவாயுதப் போரின் மூலம் மட்டுமே, ஐ-அமெரிக்கா இத்திட்டங்களில் பாதிப்பை ஏற் படுத்தலாம். ஆனால் அது ஐ-அமெரிக்காவையும் அழித்து விடும்.

ஆசியாகட்டுமானநிதிவங்கி*(AsianInfrastructure Investment Bank (AIIB))* என்றவொரு வங்கியையும் சீனா *2015*இல் உருவாக்கியது. அதன் முக்கிய பங்குதாரியாக சீனாவே உள்ளது. பெய்ஜிங்கில் நடந்த அதன் திறப்பு விழாவில் *56* நாடுகள் பங்கு பற்றின. அதில் ஐ-அமெரிக்க கூட்டாளிகளான அவுஸ்திரேலியாவும், பிரித்தானியாவும் ஐ-அமெரிக்காவின் விருப்பத்திற்கு எதிராக பங்குபற்றின. ஐ-அமெரிக்காவும் ஜப்பானும் பங்குபற்றவில்லை. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற அமைப்புக்களுக்கு போட்டியாக இவ் வங்கி வளரலாம் என்று சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் ஐ-அமெரிக்காவின் செல்வாக்கில் இயங்குகின்றன.

சங்காய் ஒத்துழைப்பு அமைப்பும் *(Shanghai Cooperation Organization (SCO))* ஒரு காலத்தில் நேற்றோவுக்கு *(NATO)* மாற்றாக வளரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தொடரும்**

# காட்டப்படாத காட்சிகளும் கண்டு கொள்ளப்படாத வலிகளும்

உலகெங்கும் பல்வேறு காரணங்களால் பறிக்கப்படுகின்ற மில்லியன் கணக்கான மனித உயிர்கள் தொடர்பில் நாம் வாழும் தற்போதைய மனித சமூகம் அதிக அக்கறை கொள்வதில்லை. ஆனால் தற்போதைய கொரோனா மரணங்கள் தொடர்பில் உலக நாடுகள் அலறித்துடித்து ஒப்பாரி வைத்து அழுகின்றன. ஊடகங்களும் தங்கள் பங்கிற்கு உலகில் வேறெந்த செய்திகளும் இல்லை என்பது போல் இவை தொடர்பான செய்திகளை அள்ளிக் கொட்டுகின்றன.

இந்த நாட்டில் இத்தனை பேருக்கு தொற்று, இத்தனை பேர் மரணமடைந்துள்ளனர் என்ற செய்திகள் கிரிக்கெட் விளையாட்டின் நேரடி வர்ணனை போல அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகில் கொரோனா தொடர்பான மரணங்களை விட இது போன்ற அல்லது இதையும் விஞ்சிய அளவிலான மரணங்கள் நிகழவில்லையா?

உலகில் ஒவ்வொரு நாளும் பட்டினி, தொற்று நோய்கள் போன்றவற்றால் கொரோனா மரணங்களைவிட பன்மடங்கு அதிகமான மரணங்கள் நிகழ்கின்றனவே. ஏன் அவை பற்றி எதுவும் அதிகமாக பேசப்படுவதில்லை? ஏன் கொரோனா பற்றி மட்டும் இன்று இத்தனை ஆர்ப்பாட்டம்?

இன்றைய கொரோனா பரவலானது, அதிகளவில் 'பணக்கார நாடுகளை', 'பலம் வாய்ந்த நாடுகளை' பதம் பார்த்துள்ளதன் விளைவே இது. இந்த பலத்த சலசலப்புகள் ஒன்றும் மனித உயிர்கள் பற்றிய கரிசனைகள் தொடர்பானவை அல்ல. முதலாளித்துவத்தின் முள்ளந்தண்டு பலவீனப்படுகின்றதே என்ற ஆதங்கத்தின் விளைவு.

சீனாவில் இந்த ஆண்டு சனவரி 11 அன்று கொரோனா வைரஸ் தாக்கத்தினால் முதல் மரணம் பதிவாகியது. இன்றைய நிலையில் உலகளாவிய ரீதியில் நாளொன்றிற்கு நிகழும் கொரோனா வைரஸ் தொடர்பிலான மரணங்களின் தொகை அண்ணளவாக 1,500 என கொள்ளலாம்.

ஆனால் வருடம் தோறும் 09மில்லியன் மக்கள் பட்டினியாலும் அது தொடர்பான நோய்களாலும் இறக்கின்றனர். இதில் 3.1 மில்லியன், சிறுவர்கள் என்பது மனதை உருக்கும் செய்தி. ஆக இங்கு பட்டினியால் நாளொன்றிற்கு உயிர் விடும் மக்களின் எண்ணிக்கை அண்ணளவாக 25,000 ஆகிறது.

இன்று உலகில் தவிர்க்கக்கூடிய தொற்று நோய் மரணங்கள் பல மில்லியன்களாக உள்ளன. வயிற்றோட்டம், நியூமோனியா என்பவற்றால் பாதிக்கப்பட்டு தகுந்த சிகிச்சை வசதிகள் இன்றி 02 மில்லியன் சிறார்கள் உயிரிழக்கின்றார்கள்.

நியூமோனியாவினால் மொத்தம் 2.56 மில்லியன் மக்கள் மரணமடைகின்றனர் (2017). இந்த வகையில் ஒரு நாளைக்கு 7,000 பேர் மரணமடைகின்றனர்.

கசரோகம்(Tuberculosis-TB) உலகில் 1.5மில்லியன் உயிர்களை பலிகொள்கிறது. இந்த வகையில் பார்த்தால் TB தொற்று நோயால் நாளொன்றிற்கு 4000பேர் பலியாகின்றனர்.

உலகில் 750 மில்லியன் மக்கள் சுத்தமான குடிநீரை பெறமுடியாத நிலையில் இருக்கின்றனர். போதிய சுத்தமான குடிநீரின்மை, குறைவான சுகாதார நடைமுறைகள் என்பவற்றால் 842,000 மக்கள் இறக்கின்றனர், அல்லது நாளொன்றிற்கு 2,300 பேர் மடிகின்றனர்.

**சுடரவன்**

உலகில் வருடம் தோறும் 228மில்லியன் பேர் மலேரியாவால் பாதிக்கப்படுகின்றனர். 40,5000பேர் மரணமடைகின்றனர் ((2018). மலேரியாவால் நாளொன்றிற்கு உயிர் விடுபவர்களின் தொகை 1100 என்றாகிறது.

இதுபோலவே தவிர்க்கக்கூடிய பல்வேறு நோய்களால் உயிரிழக்கும் மக்களின் தொகை பாரியதாகும். ஆனால் இவை பற்றி அநேகமான உலக நாடுகளோ அனைத்துலக அமைப்புகளோ அல்லது ஊடக உலகோ அதிகமாக எதுவும் பேசுவதில்லை. இத்தகைய மரணங்கள் பெரும்பாலும் மூன்றாம் உலக நாடுகள் என்று கூறப்படுகின்ற வறிய நாடுகளிலேயே பெரிதும் இடம்பெறுகின்றன.

இதற்கான காரணங்களாக சிலவற்றை மேலெழுந்தவாரியாக கூறிவிட்டு, ஒப்புக்கு சில நடவடிக்கைகளை எடுத்து விட்டு, உலக துறைசார் அமைப்புகள் அமைதியாகி விடுகின்றன.

மேற்குறிப்பிட்ட வகையான பாரிய உயிர்ப் பலிகளுக்கான அடிப்படையான காரணங்கள் பற்றி ஆழமாக ஆராயப்படுமிடத்து, அவை இன்றைய உலக ஒழுங்கை ஒருதலைப்பட்சமாக வடிவமைக்க முயல்கின்ற சக்திகளை குற்றவாளிக் கூட்டில் கொண்டு நிறுத்துகிறது.

இந்த அடிப்படையான காரணத்துக்காகவே இவ்வாறான மரணங்கள் மறைக்கப்படுகின்றன அல்லது இது தொடர்பில் அடக்கி வாசிக்கும் நடைமுறை கடைப்பிடிக்கப்படுகிறது.

இன்றைய கொரோனா மரணங்கள் தொடர்பில் எடுக்கப்படும் விழிப்புணர்வு செயற்பாடுகள், விரைவு நடவடிக்கைகள், பொருளாதார உதவிகள் போன்ற செயற்பாடுகளை நாம் வேறெந்த காலத்திலும் காணவில்லை. "இது உலகளாவிய நோய்த் தொற்று நிலை (pandemic)" என காரணம் கூறப்பட்டாலும், இந்த நோய்த் தொற்றை விட மில்லியன் கணக்கில் உயிர்ப்பலி வாங்கும் பட்டினி மற்றும் ஏனைய தொற்று நோய்களையிட்டு ஏன் அக்கறை காட்டப்படுவதில்லை என்ற வினாவுக்கு நேர்மையான, உண்மையான பதில் கிடைக்கப் போவதில்லை.

இன்று ஏற்பட்டுள்ள கொரோனா நோயின் தாக்கம் பணக்கார நாடுகளின், முதலாளிகளின் ஆட்சி சராசரி குடிமக்கள் தொடர்பில் கொண்டிருந்த கரிசனத்தை வெளிச்சம் போட்டு காட்டுவதாக அமைந்துள்ளது.

பல நாடுகளில் பணிக்கான கொடுப்பனவுகளை வழங்குவது முடியாததாக உள்ளது. மக்களின் அன்றாட உணவுத் தேவையைக்கூட கண்டு கொள்ளாமல் பல ஆட்சியாளர்கள் கரிசனையற்ற நிலையில் அல்லது கையறு நிலையில் செயலற்றிருக்கின்றனர்.

போதிய மருத்துவக் கருவிகள், அவசர சிகிச்சைக்கான படுக்கைகள், முகக் கவசங்கள், தொற்று நீக்கிகள் இன்றி சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் மட்டுமன்றி பெருந்தொகையான மருத்துவர்கள், தாதியர்கள் நாளாந்தம் மடிந்து கொண்டிருக்கின்ற செய்திகள் யாவரையும் சிந்திக்க வைக்கின்றன.

நட்பு நாடுகள், பொருண்மிய, படைத்துறை கூட்டுக்கள் என்றெல்லாம் போடப்பட்ட வேடங்கள் இன்று வெளுத்துப்போய் நிற்கிறன. இங்கிலாந்துக்கு வரும் மருத்துவ பொருட்களை அமெரிக்கா கைப்பற்றிச் செல்கிறது. சுவிற்சர்லாந்துக்கு வரும் மருத்துவ பொருட்களை ஜெர்மனி எல்லையில் தடுக்கிறது. இத்தாலி தான் கைவிடப்பட்டதாக உணர்கிறது.

இந்த நிலைமைகள் இவ்வாறிருக்க, மனித இனம் எதிர் நோக்கியிருக்கின்ற பேராபத்து கண் முன்னே விரிகிறது. பேராசை பிடித்த முதலாளித்துவத்தின் கட்டுமீறிய சுரண்டலின் விளைவாக பூமி கொதித்துப்போய் கிடக்கிறது. வானம் விஷவாயுக்களால் நிரம்பிப் போய் நிற்கிறது.

விளைவு 'காலநிலை மாற்றம்' என்ற பேரழிவு மனித இனத்தை வேரறுக்க ஆரம்பித்துள்ளது. கடும் வறட்சியும், பெரும் வெள்ளப் பெருக்கும் உலக உணவு உற்பத்தியை கேள்விக்குறியக்கி நிற்கிறது. அத்துடன் காலநிலை மாற்றமானது பல்வேறு நோய்களுக்கும், தொற்று நோய்களுக்கும் காரணமாக அமைவதாகவும் ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன. எனவே எதிர்வரும் நாட்களில் உலகம் மிகக்கடுமையான பட்டினி நிலைமையை, நோய்த் தாக்கங்களின் கடுமையை காணுகின்ற நிலைமை ஏற்படும்.

இனியும் உலக சமூகம் இவற்றை உணர்ந்து மனித சமூகத்தின் பாதுகாப்பில், நலனில் அக்கறை கொண்ட அரசுகளை நிறுவத் தவறினால், அவ்வாறான சமூகத்தை உருவாக்கத் தவறினால், இந்த பூமிப்பந்தில் மனித வாழ்வு அதிக காலம் நீடிக்கும் என எதிர்பார்க்க முடியாது.

• • •

# கோவிட்-19 இனால் முடங்கிய மிதக்கும் படைத்தளங்கள்

அமெரிக்காவின் படை பலத்தின் முது கெலும்பாக விளங்குவது அதன் விமானம் தாங்கி கப்பல்கள் தான். உலகில் அதிகளவு விமானம் தாங்கி கப்பல்களை கொண்டுள்ளதே அமெரிக்கப் படையினரின் மிகப்பெரும் பலம். அதனைப் போலவே அதன் கூட்டணி நாடுகளான பிரித்தா னியா மற்றும் பிரான்ஸ் ஆகியன தலா ஒவ்வொரு விமானம் தாங்கி கப்பல்களைக் கொண்டுள்ளன.

ஆனால் தற்போது பிரான்ஸ் இன் சார்ள்-து-கோல் என்ற விமானம் தாங்கி கப்பலும், அமெரிக்காவின் தியடோர் ருசவேல்ற் என்ற அணு சக்தியில் இயங்கும் மிகப்பெரும் கப்பலும் கோவிட்-19 வைரசின் தாக்கத்தால் முற்றாக முடங்கியுள்ளன.

அமெரிக்க கப்பலில் ஏற்பட்ட தொற்றுக்க ளால் பதற்றமடைந்த அதன் கட்டளை அதிகாரி உதவி கேட்டு மின்னஞ்சல் அனுப்பியது, ஊடகங் களை சென்றடைந்ததால் அமெரிக்க அதிபர் கடற் படை அதிகாரியை பதவி நீக்கம் செய்ததுடன், அமெரிக்க கடற்படையின் உதவி செயலாளரும் பதவி விலகியிருந்தார்.

5000 மாலுமிகளைக் கொண்ட இந்த கப்பல் குவாம் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், அதில் உள்ள 500 பேருக்கு நோய் உள்ளதும் கண் டறியப்பட்டுள்ளது.

இதனிடையே, பிரான்ஸ் நாட்டு கப்பல் கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன், அதில் உள்ள 2,300 பேரில் 1,081 பேருக்கு நோய் உள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## சீனாவில் கடும் பொருளாதார வீழ்ச்சி – உலக நாடுகளையும் பாதிக்கும்

சீனாவின் பொருளாதார வளர்ச்சி 6.8 விகி தத்தால் கடந்த 3 மாதங்களில் வீழ்ச்சி கண்டுள்ளது. 1992 ஆம் ஆண்டுக்கு பின்னர் சீனாவின் பொருளா தாரம் வீழ்ச்சி கண்டது இதுவே முதல் தடவை.

உற்பத்தி வீழ்ச்சி, வேலையிழப்பு, அதிக செலவீனம் ஆகியனவே இந்த வீழ்ச்சிக்கு கார ணம். பொருளாதாரம் 6.5 விகிதத்தால் வீழ்ச்சி காணும் என றொய்ட்டர் செய்தி நிறுவனம் முன் னர் தெரிவித்த போதும் இழப்பு அதனைவிட அதிகமாக உள்ளது.

எனினும் சீனாவின் இந்த வீழ்ச்சி ஏனைய நாடுகளையும் அதிகம் பாதிக்கும் எனவும் அமெரி க்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளா தாரம் 15 தொடக்கம் 35 விகிதம் வரை வீழ்ச்சி காணும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, வூகான் மாநிலத்தில் வைத் தியசாலைகள் தவிர்ந்த வீடுகள் மற்றும் வயோதி பர் இல்லங்களில் இடம்பெற்ற மரணங்களின் விபரத்தை சீனா வெளியிட்டுள்ளது. இதன் அடிப் படையில் இறப்பு எண்ணிக்கை 1290 ஆக உயர்ந் துள்ளதாக சீனா கடந்த வெள்ளிக்கிழமை(17) தெரிவித்துள்ளது.

## வேலையிழந்தோர் எண்ணிக்கை உயர்வு

### – நெருக்கடியில் அமெரிக்கா

கொரோனா வைரசின் தாக்கத்தால் அமெ ரிக்காவில் பல நிறுவனங்கள் மற்றும் கடைகள் மூடப்பட்டதால் அங்கு வேலையிழந்தவர்களின் எண்ணிக்கை கடந்த வியாழக்கிழமை (16) வரை 22 மில்லியனாக உயர்ந்துள்ளது.

கடந்த 3 வாரங்களில் அங்கு 22 மில்லியன் மக்கள் வேலையிழந்துள்ளதால் அமெரிக்கா மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள் ளது.

நிறுவனங்கள் மீள திறக்கப்படும் போது பலர் பணிகளில் மீண்டும் இணையும் சாத்திய ங்கள் உள்ள போதும், கடந்த பெப்ரவரியில் இரு ந்த நிலையை 2022 ஆம் ஆண்டே அமெரிக்கா மீண் டும் அடையும் என ஒக்ஸ்போட் பொருளியல் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

## மின்னஞ்சல்கள் மூலம் தகவல் திருட்டு

தற்போதைய நெருக்கடி நிலையை பயன் படுத்தி மின்னஞ்சல் மூலம் மக்களின் தகவல் களை திருடி நிதி மோசடியில் ஈடுபடும் நடவடிக் கைகள் அதிகரித்துள்ளதாக கூகுள் நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை (17) தெரிவித்துள் ளது.

தினமும் 18 மில்லியன் தவறான மின்னஞ்ச ல்கள் ஜி-மெயில் பாவனையாளர் களுக்கு மட்டும் அனுப்பப்படுகின்றன. கொரோனா வைரஸ் தொடர் பில் அனுப்பப்படும் 100 மில்லியன் மின் னஞ்சல் களை தினமும் முடக்கி வருவதாக கூகுள் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான மின்னஞ்சல்கள் உலக சுகாதர நிறுவனம் மற்றும் அரச நிறுவனங்களின் பெயர்களை பயன்படுத்தி அனுப்பப்படுகின்றன.

## ஆய்வுகூடத்தில் ரைவஸ் உருவாக்கப்பட்டதற்கு ஆதாரமில்லை – பிரான்ஸ்

அமெரிக்கா கூறுவது போல சீனாவின் வூகான் மாநிலத்தில் உள்ள ஆய்வுகூடத்தில் வைரஸ் கிருமிகள் உருவாக்கப்பட்டதற்கு எந்த ஆதாரமும் இல்லை என பிரான்ஸ் இன் அதிபர் இமானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஊடகங்கள் கூறுவது போல கோவிட்-19 வைரஸ் சீனாவின் பி-4 என ப்படும் உயிரியல் ஆய்வுகூடத்தில் தயாரிக்கப்பட் டதற்கான ஆதாரங்கள் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் இது சீனாவின் ஆய்வுகூடத்தில் தான் தயாரிக்கப்பட்டது என அமெரிக்க அதிபர் தொடர்ந்து தெரிவித்து வருவதுடன், அமெரிக்க ஊடகங்களும் சீனாவுக்கு எதிரான செய்திகளை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன.

ஆனால் விஞ்ஞானபூர்வமான ஆதாரங்கள் அற்ற குற்றச்சாட்டு இது என சீனா தெரிவித்து ள்ளது.

## மரணங்களை எதிர் கொள்ள முடியாது திணறும் ஈகுடோர்

ஈகுடோர் நாட்டில் கொரோனா வைரசின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அங்கு நிகழும் மரணங்களை எதிர் கொள்ள முடியாது அரசும், மக்களும் திணறி வருகின்றனர்.

மரணமடைபவர்களை வீட்டிலேயே கை விடுதல், வீதிகளில் வீசுதல், வீதிகளில் போட்டு எரித்தல், பொது இடங்களில் கைவிட்டு செல்லு தல் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் நாடு மிகப்பெரும் சுகாதார சீர்கேட்டை எதிர் கொண்டுள்ளது.

அரசின் தகவல்களின்படி அங்கு இதுவரை 421பேர் பலியாகியுள்ளதாகவும், 8,450 பேர் தொற் றுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகி ன்றது. ஆனால் அங்கு பாதிக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை அதிகம் என்பதையே மக்களின் நடவடிக்கைகள் காட்டு வதாக பி.பி.சி ஊடகம் தெரிவித்துள்ளது.

குவாயஸ் மாகாணத்தில் 6,700 பேர் கடந்த இரு வாரங்களில் இறந்ததாக அரசு கூறுகின்றது. ஆனால் கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் அங்கு 1,000 பேர் தான் இறந்திருந்தனர். இந்த பகுதியே அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியாகும். மார்ச் மாதம் முதல் அங்கு 14,561 பேர் பலியாகி யுள்ளனர். ஆனால் கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் அங்கு 2,000 பேரே மரணமடைந் திருந்தனர்.

வீடுகளில் இருந்து 771சடலங்களை தாம் கைப்பற்றியுள்ளதாக காவல்துறை அதிகாரி ஜோகே வரெட் தெரிவித்துள்ளார். தற்போது மர ணமடைபவர்களை வைப்பதற்கு தாம் கடதாசி யில் தயாரிக்கப்பட்ட பிரேதப்பெட்டிகளை விநி யோகித்து வருவதாக அவர் தெரிவித்து ள்ளார்.

தமது அரசு தாமதமாக நடவடிக்கை எடுத்ததற்கு தன்னை மன்னிக்குமாறு பிரதி அரச தலை வர் ஒற்றோ சொன்செகொல்சர் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளார்.